சார்பு நீதிமன்றம், மேலூர்

OS No. 52/2024

பெயர் : கணேசன்

தகப்பனார் பெயர் :செல்லச்சாமி

கணவர் பெயர் :

வயது :68

கிராமம் :அ.வள்ளாலப்பட்டி

வட்டம் :மேலூர்

தொழில் :தினக்கூலி

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

01.04.2026

வா.சா.2 முதல் விசாரணை:

நான் நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிப்பதற்கு அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது என்று சாட்சி அழைப்பாணையை காட்டுகிறார். எனக்கு வந்த அழைப்பாணையில் கடந்த 21.12.2021 அன்று போதும்பொண்ணு, அமுதா ஆகியோருக்கிடையே ஏற்பட்ட அடமான பத்திரத்தில் கையெழுத்திட்டது சம்பந்தமாக சாட்சியம் அளிக்க கோரப்பட்டிருந்தது என்றால்ச ரிதான். இந்த வழக்கின் அமுதா எனக்கு சொந்தம். போதும்பொண்ணை எனக்கு தெரியாது. அமுதா தான் என்னை அடமான பத்திரத்தில் சாட்சியாக கையெழுத்திடவேண்டும் என்று வரக்கூறினார். சாட்சியிடம் வா.சா.ஆ.1 அடமான பத்திரம் காட்டப்பட்டு, அதில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து தன்னுடையது தான் என்று சாட்சி ஒப்புகொள்கிறார். மேற்படி பத்திரத்தில் இன்னாரென்று நிருபித்த இடத்தில் நான் சாட்சியாக கையெழுத்திட்டுள்ளேன் என்றால் சரிதான். போதும்பொண்ணு, அமுதாவிடம் இருந்து 2,50,000ரூபாயை பெற்று கொண்டு அடமானம் எழுதி கொடுத்தார். 1-1/2 வட்டி என்று பேசப்பட்டது.

என்னுடன் சேர்ந்து மீனாட்சி என்ற மற்றொரு நபரும் கையெழுத்திட்டார். மீனாட்சியை எனக்கு தெரியாது. மேற்படி வா.சா.ஆ.1 அடமான பத்திரத்தை தயாரித்தவர் அலங்கார கணேசன் என்ற பத்திர எழுத்தர்.

பிரதிவாதி தோன்றாதரப்பினர் என்பதால் குறுக்கு விசாரணை இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.04.01 16:51:53 +0530

Sub Judge

Melur